**நீர்வளத்துறை**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| **பொறி. சு.முருகேசன், பி.இ.,** | திரு.V.S.சீனிவாசன் மற்றும் |
| செயற்பொறியாளர், நீவது., | R.மனோகரன், |
| அமராவதி வடிநில கோட்டம், | 39, ராமகிருஷ்ணாபுரம், |
| தாராபுரம். | கரூர் நகரம். |

**க.எண். வப/ வஅ-2 / கோ.3பி / 226M / 2022 / நாள்.14.07.2022.**

அய்யா,

பொருள்: பாசனம் - சிறுபாலம் அமைத்தல் - கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம் - ஆண்டாங்கோவில் (கிழக்கு) கிராமம் க.ச.எண் :2220-ல் உள்ள விவசாய நிலத்திற்கு வேளாண் இடு பொருட்கள் மற்றும் விளை பொருட்கள் கொண்டு செல்ல கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம் பள்ளபாளையம் அணைக்கட்டிலிருந்து பிரியும் இடதுகரை வாய்க்கால் சரகம் 25 கி.மீ மற்றும் 26 கி.மீ-ல் உள்ள பாசன மதகுகளின் கீழ் வரும் பாசன நிலங்களின் கழிவு நீர் செல்லும் கழிவு வாய்க்காலின் (ஆண்டாங்கோயில் கிழக்கு கிராமம் க.ச.எண்.2245 மற்றும் க.ச.எண்.2223) குறுக்கே சிறு பாலம் (2.40 மீ அகலம் - RCC SLAB CULVERT) அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. தங்களது விண்ணப்பம் நாள். 09.06.2022.
2. இவ்வலுவலக கடித எண். வப / வஅ-2/கோ. 3பி/ M / 2022 / நாள். 13.07.2022.
3. தங்களின் கடித நாள். 14.07.2022.

*******

பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, தங்களுக்கு பாத்தியப்பட்ட கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆண்டாங்கோயில் (கிழக்கு) கிராமம் க.ச.எண் :2220-ல் உள்ள விவசாய நிலத்திற்கு வேளாண் இடு பொருட்கள் மற்றும் விளை பொருட்கள் கொண்டு செல்ல கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம் பள்ளபாளையம் அணைக்கட்டிலிருந்து பிரியும் இடதுகரை வாய்க்கால் சரகம் 25 கி.மீ மற்றும் 26 கி.மீ-ல் உள்ள பாசன மதகுகளின் கீழ் வரும் பாசன நிலங்களின் கழிவுநீர் செல்லும் கழிவு வாய்க்காலின் (ஆண்டாங்கோயில் கிழக்கு கிராமம் க.ச.எண்.2245 மற்றும் க.ச.எண்.2223) குறுக்கே சிறு பாலம் (2.40 மீ அகலம் - RCC SLAB CULVERT) தங்களது சொந்த செலவில் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குவதற்கு காப்புத் தொகையாக ரூ.5,000/-ம், தளவாடகையாக ரூ.500/-ம் ஆக மொத்தம் ரூ.5,500/-ஐ மட்டும் தாராபுரம், பாரத மாநில வங்கியில் (SBI) செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, அமராவதி வடிநிலக் கோட்டம், தாராபுரம் அவர்களின் கணக்கில் சலான் மூலம் செலுத்தி, அந்த செலுத்துச் சீட்டுடன் கோட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதாக ரூ.50/- மதிப்புள்ள அரசு முத்திரைத் தாளில் எழுதிக் கையொப்பமிட்டு இவ்வலுவலகத்திற்கு கொடுத்ததைத் தொடர்ந்து மேற்படி இடத்தில் தங்களது சொந்த செலவில் சிறு பாலம் (2.40 மீ அகலம் - RCC SLAB CULVERT) அமைப்பதற்கான அனுமதி பின்வரும் நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. சிறு பாலம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர பிற இடங்களில் அமைக்கக் கூடாது.

2. மேற்படி பாலம் அமைக்கும்போது கழிவுநீர் வாய்க்காலின் நீர்போக்கிற்கு எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது. மேலும் கழிவுநீர் வாய்க்காலின் நீள அகலங்களில் எவ்வித மாறுபாடும் ஏற்படக் கூடாது.

3. சிறு பாலத்தை கழிவுநீர் வாய்க்காலின் முழு நீரளவு மட்டத்திற்கு மேல் ஒரு அடி உயரத்தில் அமைக்க வேண்டும்.

4. சிறு பாலம் அமைதத பின்னர் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தை பிற்காலத்தில் உரிமை கொண்டாடி நீதிமன்றம் செல்லக் கூடாது.

5. சிறு பாலம் அமைக்கும்போது கழிவுநீர் வாய்க்காலின் கரை மற்றும் இதர இடங்களில் ஏற்படும் சேதங்களைத் தங்களது சொந்த செலவில் சீரமைத்துக் கொடுக்க வேண்டும்.

6. சிறு பாலத்தை பொதுப்பணித்துறையின் அலுவலர்களின் மேற்பார்வையில் தான் அமைக்க வேண்டும். மேலும் பொதுப்பணித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படிதான் (Approved Plan) பாலம் அமைக்க வேண்டும்.

7. சிறு பாலம் அமைத்த பின்னர் பொதுமக்களிடமிருந்து பிற்காலத்தில் ஆட்சேபனை ஏதும் வரப்பெற்றால் தங்களின் சொந்த செலவிலேயே பாலத்தை அகற்றித் தர வேண்டும்.

8. சிறு பாலம் அமைப்பதற்காக தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிய வந்தால் உடனடியாக இவ்வனுமதி ரத்து செய்யப்படும்.

9. மேற்படி சிறுபாலம் விவசாயம் சார்ந்த உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

10. வருட தள வாடகையாக ரூ. 500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) குறிப்பிட்ட தேதியில் தவறாமல் செலுத்தப்பட வேண்டும்.

11. தற்போது வழங்கப்படும் இந்த அனுமதியை ரத்து செய்ய செயற்பொறியாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் இருப்பதால், இது தொடர்பாக நீதிமன்றம் செல்லக் கூடாது.

14/7/2022

செயற்பொறியாளர், நீவது,
அமராவதி வடிநிலக் கோட்டம்,
தாராபுரம்.